மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 113/2016</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் 12ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஞான சௌந்தரி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>12.09.2025 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 2ம் வாதி சக்திவேல் என்பவர் தனது தகப்பனார் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் மீது தாராபுரம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியும். அந்த வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் தாக்கல் செய்திருந்த ஆவணங்களை நகல் எடுத்து இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டரும், 2ம் வாதியும் தங்களுக்குள் சமரசம் செய்து கொண்டு தெய்வசிகாமணி கவுண்டர் 2ம் வாதிக்கு பாகம் கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது.

2. தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் தாராபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு என்ன ஆனது என்பதை பொறுத்து ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கின் தீர்ப்பு என்ன ஆனது என்பது சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள தாராபுரம், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தெய்வசிகாமணி கவுண்டர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மேற்படி வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரால் நிரூபணம் செய்யப்படாத ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் 2ம் வாதியும், தெய்வசிகாமணி கவுண்டரும் ஒரே முகவரியில் வசிப்பதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணமாக தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் தாக்கல் செய்த விளக்க உரையை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. அந்த விளக்கவுரையில் சக்திவேல் என்பவர் கடந்த 23.10.1971 தேதியில் பிறந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.6 ஆவணமாக ஒரு பாக்கியம் மற்றும் ராமசாமி ஆகியோர்களுக்கு 08.10.1971 தேதியில் ஒரு ஆண் குழந்தை பிறந்ததாக கண்டுள்ளது என்றால் ஆமாம். தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் உத்தமபாளையம் கிராமம், சிலம்பகவுண்டர் வலசு கிராமத்தில் தான் பிறந்தார் என்றும், அங்குதான் வாழ்ந்து அங்கேயே இறந்துவிட்டார் என்றும் சொன்னால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் குழந்தையானது பச்சாபாளையம் கிராமத்தில் பிறந்ததாக தான் கண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் பதிவு எண் என்ற

இடத்தில் வருட எண்.81, மாத எண்.5 என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 ஆவணமானது 2ம் வாதி சக்திவேல் என்பவரின் பிறப்பு சான்றிதழ் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பச்சாபாளையம் கிராமத்தில் இருந்த ஒரு நபருக்கு பிறந்த குழந்தையை பொறுத்து உத்தமபாளையம் கிராமத்தில் பிறந்ததாக காண்பிப்பதற்காக மேற்படி பி.வா.சா.ஆ.6 ஆவணம் பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்டுள்ள குழந்தையின் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் சக்திவேல் என்பவர் 09.05.1972 தேதியில் பிறந்ததாக அதில் கண்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் தெய்வசிகாமணி பண்டாரம் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. பள்ளியில் தாயாரோ தகப்பனாரோ தான் சென்று ஒரு குழந்தையை சேர்ப்பார்கள் என்றால் ஆமாம்.

7. 2ம் வாதி சக்திவேல் என்பவரை யார் பள்ளியில் கொண்டு சேர்த்தார்கள் என்பதற்கான ஆவணங்களை நான் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள புனிதா அமலா அன்னை மெட்ரிகுலேஷன் பள்ளியின் முதல்வர் அவர்களை ஒரு சாட்சியாக விசாரிக்க போகிறேன் என்றால் அது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.7 இரண்டு ஆவணங்களிலுமே 2ம் வாதியில் பிறந்த தேதி முன்னுக்குப் பின் முரணாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள தெய்வசிகாமணி என்பவர் 2ம் வாதியில் தகப்பனாரான தெய்வசிகாமணி கவுண்டர் தான் என்று சொன்னால் சரியல்ல.

8. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தின் அடிப்படையில் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவர் 2ம் வாதியில் சக்திவேல் என்பவர் 27.08.1972 ஆம் தேதி பிறந்ததாக பதிவு செய்துள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.8 ஆவணமானது உத்தமபாளையம் கிராம பிறப்பு, இறப்பு பதிவேட்டில் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் மேற்படி ஆவணம் வழங்கப்பட்ட தேதியில் சக்திவேல் என்பவர் எந்த வகுப்பில் படித்து வந்தார் என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2005 ஆம் ஆண்டு தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட பாககரார் வழக்கானது மேற்படி தெய்வசிகாமணி கவுண்டர் மற்றும் 2ம் வாதிக்கிடையே சமரசம் ஏற்பட்டு சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

9. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது தெய்வசிகாமணி கவுண்டர் என்பவருக்கும் 2ம் வாதிக்கும் இடையே நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஏற்பட்டதன் அடிப்படையில் சொத்துக்களை செய்து கொள்வதாகவும் அதனால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டிய குறிப்பாணையை குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த குறிப்பாணையின் அடிப்படையில் தான் மேற்படி பாகப்பிரிவினை வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

10. எனது கணவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் விளக்கவுரை மற்றும் ஆவணங்கள் ஆகியவை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 1ம் வாதி பாக்கியம் என்பவர் ஒரு ராமசாமி என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றும், பின்னிட்டு தெய்வசிகாமணி பண்டாரம் என்பவரோடு வாழ்ந்து வந்தார் என்றும், நான் சொல்லி உள்ள விவரங்களை எதன் அடிப்படையில் சொல்லி உள்ளேன் என்றால் சிலம்பகவுண்டன் வலசு ஊரில் உள்ள ஒருவர் சொன்னதன் அடிப்படையில் சொல்லி உள்ளேன். புளியம்பட்டி என்ற ஊரில் ஒரு ராமசாமி என்பவர் வசித்து வந்தார் என்பதையும், சிலம்ப கவுண்டர்வலசில் தெய்வசிகாமணி பண்டாரம் என்ற நபர் இருந்து வந்தார் என்பதையும் பொறுத்து நான் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

11. நான் சொல்லியுள்ள ராமசாமி மற்றும் தெய்வசிகாமணி பண்டாரம் ஆகிய நபர்கள் என் கணவரால் 2005 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட பாகப்பிரிவினை வழக்கில் எதிர்வாதம் தாக்கல் செய்யும்போது கற்பனையாக சொல்லப்பட்ட விவரங்கள் என்று சொன்னால் சரியல்ல. சக்திவேலுக்கும், என் கணவர் தெய்வசிகாமணி கவுண்டருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதன் அடிப்படையில் சக்திவேல் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றும், அதனால் ஏற்பட்ட மனவிரோதத்தின் காரணமாக பொய்யான சங்கதிகளை சொல்லி தெய்வசிகாமணி கவுண்டர் பொய்யான எதிர்வாதத்தை தாக்கல் செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

12. பின்னிட்டு தெய்வசிகாமணி கவுண்டர் மனம் மாறி 2ம் வாதியை தன் மகனாக ஏற்றுக் கொண்டு தனது சொத்துக்களை பொறுத்து 2ம்

வாதிக்கு பாகம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள தெய்வசிகாமணி கவுண்டர் 2005 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் மேற்படி வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரால் நிரூபணம் செய்யப்படாத ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களில் எவ்வித உண்மை தன்மையும் இல்லை என்றும், மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ள தக்கவை அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

13. 1978ல் என் திருமணம் நடைபெறுவதற்கு முன்பு என் கணவர் தெய்வசிகாமணி கவுண்டர் சிலம்ப கவுண்டர் வலசில் எவ்வாறு வாழ்ந்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. சிலம்ப கவுண்டர் வலசில் உள்ள தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரின் பங்காளிகளை எனக்கு தெரியும் என்றால் தெரியும். என் கணவர் தெய்வசிகாமணி கவுண்டருக்கு வெங்கட்ரமணசாமி என்ற ஒரு பங்காளி இருந்தார் என்றால் ஆமாம்.

14. மேற்படியார்களுக்கு இடையே சொத்து சம்பந்தமாக ஒரு வழக்கு நடந்து வந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. இதே நீதிமன்றத்தில் ஒரு கருணாநிதி என்பவர் தெய்வசிகாமணி கவுண்டர் மற்றும் வெங்கட்ராமன சாமி கவுண்டர் ஆகியோர்கள் மீது அசல் வழக்கு எண்.166/1992 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது அந்த வழக்கில் தெய்வசிகாமணி கவுண்டர் குறுக்கு விசாரணையின் போது தன் மனைவி பெயர் பாக்கியம் என்றும், தனக்கு ஞான சௌந்தரி என்ற பெயரில் மனைவி இல்லை என்றும், சொல்லி உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

15. 1ம் வாதி பாக்கியம் என்பவர்தான் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரின் சட்டப்படியான முதல் மனைவி என்றால் சரியல்ல. 1ம் வாதி சக்திவேல் என்பவர் தான் தெய்வசிகாமணி கவுண்டர் என்பவரின் சட்டப்படியான மகன் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபரங்களை எல்லாம் நான் தெரிந்து கொண்டும், இந்த வழக்கில் நான் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கை இறுதி செய்வதற்கு தேவையான ஆவணங்கள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.12 19:11:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்